9th July 1962]

Tours by Minister

*190 Q.—Sri V. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the number of days the Minister for Informaton toured in South Arcot district during March 1962;

(b) the total mileage travelled within the district; and

(c) the total amount of daily allowance and travelling allowance drawn for the journeys?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) 19 days.

(b) 2,035 miles.

(c) Rs. 1,032-50 nP.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: மாதத்திற்கு 19 நாட்கள் வெளியிலே ஒரு அமைச்சர் சுற்றுப் பிரயாணம் செய்து வந்தால் கோட்டையிலே இருக்கிற வேலைகளை யார் கவனிப்பது? ஆகவே கனம் அமைச்சர் சுற்றுப் பிரயாணத்தைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டு, அலவன்ஸ் வாங்குவதையும் கொஞ்சம் குறைப்பதற்கும் மந்திரி சபையிலே ஏதாவது ஒரு நிரந்தரமான திட்டம் ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கோட்டையிலே உட்கார்ந்தும் வேலை செய்யவேண்டும். வெளியிலே போயும் வேலை செய்ய வேண்டும். எப்படி எப்படி அவசியம் இருக்கிறதோ அதன்படி சுற்றுப் பிரயாணத் திட்டம் உருவாக்கப்படுகிறது. அதிலே என்ன செலவாகிறதோ, அதைத்தான் அலவன்ஸாக வாங்குகிறார்கள். உதாரணமாக, சர்க்கார் ஜீப் காரில் போனால், அதற்கு அலவன்ஸ் வாங்குவதில்லை. ஆகவே, இதற்காக ஒரு திட்டம் தயாரிப்பது என்ற யோசனை அரசாங்கத்தினிடம் இல்லை.

திரு. கே. ஏ. **மதியழகன்:** வருஷத்தில் 70 நாட்கள் விடுமுறை நாட்களாகி விடுகின்றன. ஏறக்குறைய வருஷத்தில் 70 நாட்கள் சட்டசபையிலே அலுவல்களை கனம் மந்திரிகள் கவனிக்க வேண்டியிருக்கிறது. இதுபோக இருக்கிற மீதி 200 நாட்களிலும், 100 நாட்கள் வெளியிலே போய்விடுகிற காரணத்தினால், மந்திரிகள் கவனிக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பழைய காலத்தில் ஐ.ஸி.எஸ். ஆபீஸர்கள் கவனித்ததுபோல், இப்பொழுதும் சர்க்கார் இலாகா அதிகாரிகளே காரியங்களைக் கவனிப்பது நடைமுறையிலே இருந்து வருகிறது. மந்திரிமார்கள் தமக்குரிய பொறுப்புகளை தாங்களே நேரில் ஏற்காமல், அதிகாரிகள் சொல்லுகிற முறைப்படிதான் நிர்வாகம் நடக்கிறது என்ற அந்த அவப் பெயர் நம்முடைய மந்திரி சபைக்கு இருக்கிறது, திறமையுடன் இருந்தாலும். . . . .

கனம் சபாநாயகர்: கனம் அங்கத்தினர் கேள்வியாகப் போட வேண்டும். பிரசங்கம் செய்யக் கூடாது.

[9th July 1962

திரு. கே. ஏ. மதியழகன் : அந்த அவப் பெயரை மாற்றுவதற்காக, வேறு மாநிலங்களில் இருப்பதுபோல, இத்தனை நாட்கள் தான் கனம் மந்திரிகள் சுற்றுப் பிரயாணம் செய்ய வெளியே போகவேண்டும் என்று ஒரு சம்பிரதாயம் ஏற்படுத்தப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட அவப் பெயர் அவருடைய கருத்தில்தான் இருக்கிறது அவருடைய சிந்தனையில் இருக்கலாம். அதைப்பற்றி எழுதலாம், பேசலாம். ஆனால் உண்மையில் அப்படி ஒன்றும் அவப்பெயர் இல்லை. அப்படி இருப்பதற்கு இடமும் இல்லை. இருநூறு நாட்கள் என்று அவர்கள் சொன்னார்கள். சட்டசபையில் 70 நாட்கள் போய் விடுகிறது என்று அவர்கள் கணக்குப் போட்டார்கள். நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இருநூறு நாட்களில் மட்டுமல்ல, சட்டசபை கூடுகிற 70 நாட்களிலும் சரி, விடுமுறை நாட்கள் என்று சொல்லப்படுகிற 70 நாட்களிலும் சரி, அந்த நாட்களில்கூட கனம் மந்திரிகள் வேலை செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் அவர்கள் கணக்குப்படி 200 நாட்கள் கோட்டையிலே இருந்து வேலை பார்த்தால்கூட, தமிழ்நாட்டிலே உள்ள எல்லோரும் இங்கு வந்து மந்திரிகளைப் பார்க்க வேண்டும் என்ற முறை சரியல்ல. அது பொது மக்களுக்கு சௌகரியமாக இருக்காது. கனம் மந்திரிகள் 100 நாட்கள் வெளியே போவது, இங்கு எல்லோரையும் வரும்படிச்செய்து பார்ப்பதைவிட, ஆங்காங்கு இருக்கிற மக்களுடைய குறைகளை நேரிலே கேட்டு நிவாரணம் அளிப்பதற்கு வசதியாக இருக்கிறது. அந்த வகையிலே சுற்றுப்பிரயாணம் செய்கிறார்கள் மந்திரிகள்.

திரு வே. மாதா கவுடர் : ஸார், கோட்டையில் கனம் அமைச்சர்கள் இல்லையென்றாலும் அவர்கள் கிராமங்களில் சுற்றுப் பிரயாணம் செய்யும்போது இங்கே தேங்கி இருக்கக்கூடிய தபால்கள் எல்லாம் கனம் அமைச்சர்கள் இருக்கக்கூடிய இடங்களுக்கு வந்து அங்கு அவர்கள் வேலைகளைச் செய்துவருகிறார்கள் என்றும் கிராமங்களில் ஒரு அபிப்பிராயம் இருந்து வருகிறது. கனம் அமைச்சர்கள் கிராமங்களில் அதிகப்படியாகச் சுற்றுப் பிரயாணம் செய்தால் அவர்கள் மக்களுடன் அதிகப்படியான தொடர்பு வைத்துக் கொள்ளலாம் என்றும் அந்த முறையில் இன்னும் அதிகப்படியாக சுற்றுப்பிரயாணங்களை வைத்துக்கொள்வதற்கு கனம் அமைச்சர்கள் முன்வருவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மக்களுடன் தொடர்பு கொள்வதற்கு எவ்வளவு சுற்றுப்பிரயாணம் செய்யப்படவேண்டுமோ அந்த அளவில் செய்யப்பட்டுத்தான் வருகிறது. கனம் அங்கத்தினர் கூறியதுபோல் தனியான ஒரு உத்திரவு போட வேண்டியதில்லை. சுற்றுப்பிரயாணம் செய்யும்போது வேண்டிய அளவில் தொடர்பு வைத்துக்கொள்ளப்பட்டுத்தான் வருகிறது.